வாக்குமூலம்
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி
சி.சி.எண்.127/18
வழக்கு சாட்சி – அ.சா.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அழகர்சாமி | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | காமையன் | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | கோடாங்கிபட்டி | சமயம் | |
| தாலுக்கா | போடி | வயது | 66 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 22.02.24

**( 1ம் எதிரி இறந்துவிட்டார். 2ம் எதிரி ஆஜர். 3 முதல் 6 எதிரிகள் ஆஜர் இல்லை. 3 முதல் 6 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

ஆஜர் எதிரியை தெரியும். அசா1 எனது மகன். ஆஜர் எதிரி செல்வத்திடம் அசா1 என் மகன் கடன் வாங்கியிருந்தார். வருடம் எனக்கு ஞாபகம் இல்லை. கடனை தருவதாக சொல்லியிருந்த நிலையில் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள். சாயந்திரத்திற்குள் பணத்தை கொடுக்கவில்லை என்றால் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள். அது சம்மந்தமாக என் மகன் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். அசா1 சென்றாயன் 2ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த புரோநோட்டில் நான் சாட்சி கையெப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் அசா1 சென்றாயன் 2ம் எதிரிக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி ஆவணத்திலும் நான் சாட்சி கையெப்பம் இட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்களின் படி என் மகன் பணம் கொடுக்காததால் எதிரி செல்வம் அசல் தொகை மற்றும் வட்டியை மட்டும் தான் கேட்டார் என்றால் சரியல்ல. நான் எனது மகனுக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரத்தை தான் போலிச்விசாரணையில்

கூறியுள்ளேன் என்றால் சரிதான்.